குயில்

கிழமை இதழ்

ஆசிரியர்

பாரதிதாசன்

விலை 13 காசுகள்

குரல்: 1 | புதுச்சேரி, 10 — 3 — 59 செவ்வாய் | இசை: 40

காற்றுள்ள போதே!

கட்டளைக் கலித்துறை

காற்றுள்ள போதொடு தூற்றிக்கொள் என்று கழறுமொழி
நூற்றுக்கு நூறுமே உண்மையன் றோஇழை நுண்ணிடையே
கூற்றொக்கும் நேரு இருக்கையிற் பார்ப்பனக் குண்டரெலாம்
சோற்றுக்கும் கூறைக்கும் வாய்ப்பெய்தி யேநலம் துய்த்தனரே

கற்றுமை வென்றனம் என்றனர் பார்ப்பனர்; கண்ணெதிர்எம்
ஒற்றுமை காணுக என்றனர்; உம்மினம் போக்குதற்கே
பெற்றிமை உள்ளஎம் நேருவைப் பெற்றனம் என்றுரைத்தார்!
சற்றும்ஐ யோஉணர் வுற்றிலர் தொன்மைத் தமிழர்களே

அல்லிற் பகலில் அலுக்காம லேஎண்ப தாண்டினிலும்
சொல்லிற் செயலில் தமிழர்க்குத் தொண்டு செயும்பெரியார்
வெல்லற் கிருக்கப் பயன்கண் டிடாமல் வெறிதவிழ்த்த
நெல்லிக்காய் மூட்டைக்கு நேராயி னார்தமிழ் நேயர்களே

உலையின் அரிசி குழையுமுன் பிச்சைஎன் றோடுநர்போல்
தலைவனின் ஆற்றல் பயன்தரு முன்னோடித், தாயைவிற்றும்
புலையர் உதவி பெரிதென்றும் போனஇப் பேதைமையைக்
கலையென்ப தாலூர்க் கொலையென்ப தாவுரை கண்மணியே

பாத்திய கீரை ஒருதிங்கள் மட்டே பயனளிக்கும்
கூத்தியர் இன்பம் முதுமைவந் தாற்கெடும் குள்ளர்கையின்
மாத்தமிழ் நாட்டினை மீட்பதால் இன்பம் மறைவதுண்டோ
ஏத்தவும் பெறுவர் பின்வரு வார்களால் என்றைக்குமே!

புதுச்சேரி, தி. வ. ஆ ௧௯௯௦ மாசி ௨௯

நீர் ஒரு தலைவரா?

கேள்வி : நீர் யார்?

பதில் : மாவட்டத் தலைவர்.

கேள்வி : உம் தலைமையில் எத்தனைபேர் உறுப்பினர்?

பதில் : கிளைக் கழகங்களில் இருப்பவர்களை யெல்லாம் சேர்த்தால் நூறுபேர்கள் இருக்கலாம்.

கேள்வி : மாவட்டத் தலைமை அலுவலக உறுப்பினர்?

பதில் : எங்கே? தம் தம் வேலையைப் பார்த்துக் கொள்ளுகின்றார்கள். நான் ஒருவன்தான்.

கேள்வி : மாவட்ட மாநாடு நடத்தினீர்களா?

பதில் : ஓ! மிகச் சிறப்பாக.

கேள்வி : பெரியாருக்கு வரவேற்பு நடத்தினீர்களா?

பதில் : மிகமிகச் சிறப்பாக.

கேள்வி : உள்ளூரில் உமக்குப்போட்டியாகக் கிளம்புகின்றவர்களால் உமக்கு ஏற்படும் தொல்லை எப்படி?

பதில் : ஒழித்துக்கட்டிவிட்டேன்.

கேள்வி : இத்தனை சிறப்பாக மாநாடு, இத்தனை சிறப்பாக வரவேற்பு நடத்திய உங்களை அவர்களால் என்ன செய்ய முடியும்?

பதில் : அசைக்கமுடியவில்லை. அதற்காகத் தானே ஐயாவுக்கு வரவேற்பு! மாநாடு!

கேள்வி : சரிதானே! உங்களூர்ப்புகைவண்டி நிலையத்தில் "விடுதலை" கிடைக்கிறதா?

பதில் : இல்லை.

கேள்வி : உங்களூர்க்கு எத்தனை "விடுதலை" வருவதுண்டு?

பதில் : தனித்தனியாகத் தபாலில் வருவன மொத்தம் சேர்த்தால் எட்டு இருக்கும்.

கேள்வி : வெளியூர்க்காரர் வந்தால் கழகம் இருப்பது தெரிந்து மகிழ எத்தனை இடத்தில் கழகக் கொடிகள் பறக்கின்றன?

பதில் : அதில் என்ன ஐயா இருக்கிறது அதுபற்றி நாங்கள் எண்ணுவதேயில்லை.

கேள்வி : கழகச்சார்பில் வெளிவந்துள்ள நம் அருமைநூற்களை உங்கள்மாவட்ட மக்கள் எவ்வளவு படிகள்? எத்தனை பேர்கள்? வாங்கியிருக்கிறார்கள்

பதில் : என்னிடமிருந்துதான் வாங்கிப் போவார்கள் அவர்களும் சிலரே.

கேள்வி : பொறுப்பாகத் தொண்டு செய்யத் துடிக்கும் தொண்டர்களுக்கு இடமளித்து நீங்கள் ஏன் விலகிக் கொள்ளக்கூடாது?

பதில் : அப்படியானல் என்னைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்.

கேள்வி : நீர் ஒரு தலைவரா?

பிசிராந்தையார்

தொடர் நாடகம்

காட்சி உகூ

இடம் : பாண்டிநாடு – புறநகர்.

காலம் : காலை.

உறுப்பினர் : பிசிராந்தையார், பாண்டியன் அறிவுடை நம்பி முதலிய அனைவரும்.

காட்சித் தலைப்பு :

'பாவேந்தர் சென்றார் பாண்டிநாடே சென்றது'

நிலை : பிசிராந்தையார் எங்கே? – இதை ஆராய்ந்துவர அனுப்பப்பட்ட ஆட்கள் பாண்டியன் அவையில் பகருகின்றார்கள்.

ஆள்: க. வணக்கம்! பிசிராந்தையார் எங்குமில்லை. அவர் யானை எங்குமில்லை- நகர்ப்புறத்து மக்களிற் சிலர் சோழநாடு நோக்கிப் பிசிராந்தையார் யானைமேற் செல்வதைக் கண்டோம் என்றனர். விடியுமுன் அவருக்குக் கிடைத்த செய்தி கோப்பெருஞ் சோழனார் வடக்கிருந்து உயிர்விட உறுதி கொண்டார் என்பது. இல்லத்தில் உள்ளாரைக் கேட்டோம். விடியுமுன் வந்த செய்திகேட்டு அழுதுகொண்டிருந்தார். கோப்பெருஞ்சோழன் நாட்டுத் திசை நோக்கித் தொழுதுகொண்டிருந்தார். பின், நாங்கள் தூங்கிவிட்டோம்; விழித்தபோது அவரைக்காணாமல் ஏங்கிவிட்டோம் என்றார்கள்.

பாண்டியன் : காலத்திற்குக் கவிதை ஒன்று தருவதும் ஞாலத்திற்கு நட்புணர்ச்சி காட்டுவதும், பிசிராந்தையாரின் நோக்கமாகும். 'நான் போகவேண்டும், வர எண்ணுவோர் அனைவரும் வருக; தேர் வருக, செய்க ; முன்னேற்பாடெல்லாம். நாழிகை ஒன்றில் நான் பிசிராந்தையாரை அடைந்துவிட வேண்டும்.

காட்சி ௩௰

இடம்: சோழநாடு, வடக்கிருந்த இடம்.

காலம்: முன்மாலை.

உறுப்பினர் கோப்பெருஞ் சோழன், புலவர் பொத்தியார், சோழமன்னி, அமைச்சன் முதலியோர்; பிசிராந்தையார், பாண்டியன் அறிவுடை நம்பி முதலியோர். மற்றும் புலவர்கள். சோழன் மக்கள்.

காட்சித்தலைப்பு:

'அன்னோனை இழந்த இவ்வுலகம் என்னாவது?'

நிலை: வடக்கிருக்க அமர்ந்த கோப்பெருஞ்சோழன், வடக்கிருக்கப் பிசிராந்தையாரும் வருவார் என்று கூறியதை எதிர்த்துப் பேசி, வடக்கிருத்தலையும் சோழன் கைவிட வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள் அங்கிருப்பவர்கள்.

சோழமன்னி:

வடக் கிருத்தலை விடப்ப டாதா!
வாழ்வை எனக்குத் தரப்ப டாதா!
ஆட்சியை மக்களுக் காக்கினீர் அவர்கள்
தாழ்ச்சியை உலகு சாகும் வரைக்கும்
மக்கள் நினைவில் நிலைக்கும் வண்ணம்
மெய்க் கிறுதியை விரும்புதல் தக்கதோ!
வாழ்வர சியாக வாழ்ந்த என்னைத்
தாழ்வரசி என்று வையகம் சாற்றப்
பிரிவீர் என்றால் நான்செய்த பிழைஎன்?

சோழன்:

மனம்ஒன்று விடுவது சாவு! மற்றொன்று
தொடுவது பிறப்பு! நாட்டின் தொடர்பை
விட்டேன். செத்தேன் வடக்கை
மேவினேன்
பிறந்தேன். பெண்ணே நீவேறு நான்வேறு

வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?

தாமரை

இது தாமரசம் என்ற வடசொல்லின் சிதைவென்று ஏதுங்கெட்ட வடமொழியாளர் இயம்பி மகிழ்வர்.

மரு என்றால் தமிழில் மணத்திற்கும் பெயர். அது ஐ என்ற பெயர் இறுதிநிலையை முற்று அற்று ஒரோவழி என்ற இலக்கணத்தால் மரையாயிற்று. எனவே மரை மணமுடையது; அதாவது மலர்.

அது இனம் விலக்க தாம் என்பதைப் பெற்றுத் தாமரை என வழங்கும், மரைஎன்றே வழங்குவதும் உண்டு. தாம்என்பதன் பொருள் என்எனில் அஃது தாவும் என்பதன் ஈற்றுயிர் மெய் கெட்ட பெயரெச்சம். கொடி நீண்டது அன்றோ தாமரை! கொடி நீட்சியால் அயலிடம் தாவுகின்ற பூ; எனவே தாமரை.

தாமரை தூய தமிழ்க் காரணப் பெயர். இதைத் தாமரசம் எனஎடுத்தாண்டனர் வடவர் என அறிதல் வேண்டும்.

வாவி

இது வாபீ என்ற வடசொல் என்று கதைப்பார். ஏமாறுகின்றவர் இருக்கும் வரை ஏமாற்றுகின்றவர் இருப்பர்.

வாவுதல் — பரவுதல்; தேங்குதல் என்க. வாவுதலையுடையது வாவி.

எனவே வாவி தூய தமிழ்க் காரணப்பெயர் எனக் கடைப்பிடிக்க,

துளசி

இது துழாய் என்ற தூய தமிழ்ச் சொல்லின் சிதைவு இவ்வாறு சிதைத்து எடுத்தாண்டனர் வடவர்.

இந்தத் திருட்டு அவர்களிடம் நிலைத்து விடவே இன்று துழாய்என்பதே துளசியினின்று வந்தது என்கின்றனர். துழாய் இருக்க அவர்களால் ஒலிமாற்றம் செய்யப்பட்ட துளசிஎன்ற சொல்லை நாம் எடுத்தாளவேண்டாம்.

துழா - பரவுதல்; மணம் பரவுதல் என்க.

ய். பெயர் இறுதிநிலை.

மண அணியாகத் தந்த கணையாழி
கழற்றிச் சுழற்றி எறிவதுன் கடனும்
நான் இறந்தால் நீ இறப்பதா?
ஏனது? மக்கள்பால் அன்புனக் கில்லையா?
ஆளும் மைந்தர்க்கு நாளும் உடனிருந்து
வேண்டுவ சொல்லித் தரவேண் டாமா?

(சோழமன்னி சோர்ந்து விழுகின்றாள்)

பொத்தியீர் இத்தரை வாழ்வு போதும்
எத்தனை புகழ்ச்செயல் இருந்தன உலகில்
அத்தனை செய்தேன் அல்லவை செய்திலேன்

வாழ்வான் போலச் சாவான் வீரன்
சாவான் போல வாழ்வான் கோழை
என்கடன் நாட்டு மக்கட்குத் தொண்டு
நன்கனம் நான்அது புரிந்த துண்டு

புதுமலர் போன்ற முகங்கள் புலவீர்
எதுபற் றிக்கூம் பின? ஏன் வருந்தினீர் ?

என்சூள் உலகினர் உள்ளத் தெல்லாம்
மன்னிடச் செய்தேன் என்னொரு நண்பர்
அறியச் செய்தேன் அன்னவர் வருவதோர்
நெறியில் விழிவைத் திருந்தேன் நினைக்கிலீர்
பொன்முடி முன்போல் பூண்டு கோவிலில்
இன்னும் வருவேன் என்று நினைந்தனிர்.

பொத்தியார் :
பிசிராந்தையாரும் வருவதற் கிசைவரோ?

குயில் ...

தவிர்க்கமுடியாத சிலஇடையூறு காரணமாக இந்த இதழ் பன்னிரண்டு பக்கங்களோடு வெளிவருகிறது; அடுத்த இதழ் வழக்கம்போல் பதினாறு பக்கங்களுடன் வெளிவரும். அன்பர்கள் பொறுத்தருள்க!

—அமைச்சர்.

உடை

வித்துவான் - பா. முத்து, புதுவை.

மரந்தந்த இலைகள், பட்டை
மாற்றிலா வலிமை கொண்டே
உரம்தந்த விலங்கைக் கொன்றே
உரித்திட்ட தோல்கள்; புள்ளின்
சரம்தந்த இறகு மற்றும்
சாற்றரும் பொருள்க ளாகிப்
பரந்தவிப் புவியில் மக்கள்
பருவுடல் மறைத்தாய் அந்நாள்!

நாட்டிடை பருத்தி தந்த
நற்பஞ்சுத் துணியும் நீயே!
கூட்டிடை இலங்கும் பூச்சி
கொடுக்கின்ற பட்டும் நீயே!
வாட்டுவெங் குளிரைத் தாக்கும்
வலிமைசேர் படையாம் நல்ல
ஆட்டின்மென் மயிரால் நெய்த
அழகுகம் பளமும் நீயே!

போர்வீரன் முனிவன் கைதி
புகைவண்டி நிலையம் தன்னில்
சேர்ந்துநல் லலுவல் செய்வோன்
சிறைகாப்போன் கப்பலோட்டி
நேர்பெற இவர்கொள் தோற்றம்
நீதரும் தோற்றம் அன்றோ?
பாரில்நீ இல்லால் இந்தப்
பண்பெலாம் விளக்கு வோர்யார்?

சட்டைஉள் சட்டை துண்டு
சரிகைவேய் வேட்டி சோமன்
குட்டைகள் அங்கி கோட்டு
குல்லாய்கள் பாகை நீள்கால்
சட்டைகள் என்றிப் பேர்கள்
சாற்றுவார் உனக்கே! மக்கள்
இட்டம்போல் உருவந் தன்னை
ஏற்கின்ற நிலையேன் பெற்றாய்?

மங்கிய நிறங்கொள் மெய்க்கு
மாற்றெழில், நீயே! மக்கள்
பங்கத்தைக் காக்கும் நல்ல
படைவீரன் நீயே! வாழ்வில்
அங்கமோ குலைந்து போன
அணங்குக்கு வார்த்தெ டுத்த
தங்கத்துச் சிலைபோல் தோற்றம்
தருகின்ற கச்சும் நீயே!

நரைசேர்ந்த கிழவி கூட
நலந்திகழ் வண்ணங் கொண்ட
கரைசேர்ந்த சேலை ஒன்றைக்
கட்டினுள் என்றால் நல்ல
விரைசேர்ந்த மலரைப் போல
விளங்குவாள்; தெரிவைப் பெண்ணும்
திரைசேர்ந்த கிழவி யாகத்
திகழ்வாள்நல் லுடையில் லாக்கால்!

ஆடையில் லாத மாந்தர்
அரைமாந்தர் என்ற சொல்லின்
பீடெலாம் உனதே; அந்தப்
பெரும்புகழ் உனக்கே; நாளும்
தேடரும் செல்வம் தேடும்
திறனற்ற வறியன் வேலைப்
பாடெல்லாம் அமைந்த உன்னால்
பணக்காரன் போலா கின்றான்!

எண்ணிலாத் தடவை உன்னை
எடுத்துப்பின் தோய்த்துத் தோய்த்து
வண்ணத்தை உன்பால் ஊட்டி
வகையாகப் பெட்டி போடும்
வண்ணார்க்கு நீஇல் லையேல்
மாண்பென்ன தில்லை; இந்த
மண்மீதில் உனைச்சு மக்கும்
கழுதைக்கு மதிப்பே இல்லை!

கட்டண விவரம்

கட்டணம்	உள்நாடு	வெளிநாடு.
தனி இதழ்	13 காசு	16 காசு
ஓராண்டு	ரூ. 6—75,	ரூ. 8—50.
ஆறு மாதம்	ரூ. 3—37.	ரூ. 4—50
வாழ்நாள்	ரூ.100.	

தனி இதழ் வேண்டுவோர் பதினைந்துகாசு (0–15) அஞ்சல் தலைகள் அனுப்புக.

நல்லவர்களா நாயன்மார்கள்?

மா. இராம. தமிழ்ச்செல்வன், குடியேற்றம்.

அழகிய கோயில்! அக் கோயிலே ஓர் கலைக்கூடம். சிற்பிகளால் செதுக்கப்பட்ட சிற்பங்களை பல்லவன் மனைவி பார்த்துத் திரும்புகிறாள். அங்கோர் பூம்பொழில்! கண்ணைக் கவரும் வண்ண மலர்கள் எண்ணற்றவை! மங்கையர் கண்டால் அம்மலர் வனத்தைவிட்டு நகரார். வண்ணமலர்களைக் கண்ட மங்கையர் மனமும் வாளாக்கிடக்குமோ? உடனே அக் கண்ணைக் கவரும் வண்ண மலரைக் கொய்து தன் தலைமீது வைக்கவே முயலுவர். இது இயற்கைதானே!

பல்லவன் மனைவியும் அங்குள்ள பூம்பொழில் கண்டாள். களிப்புற்றாள் தியாகேசப் பெருமாள் கோயிலின் பெருமைதான் என்னே! என்றாள். சிற்பி செதுக்கியுள்ள சிற்பந்தான் சிறப்பென்றால், இங்குள்ள செவ்வலரி மலரும், சிவந்த ரோசாவும் அதைவிடச் சிறப்பாக உள்ளதே என வியந்தாள். வியந்தவாறே அங்கு விழுந்துள்ள ஒரு வண்ணமலரைப் பார்த்தாள். இம் மலர் வீணாக கீழே விழுந்துள்ளதே! இந்த நல்ல மலரை யாரும் கவனிக்க வில்லைபோலும். புழுதியில் புரளும்கதி ஏனோ இதற்கு? மெல்லிய மலரே! உனது மென்மை பெண்களுக்கல்லவா தெரியும் என்று தன் மலர்க்கையால் அவ் வண்ணமலரை எடுத்தாள். மலரை நுகர்ந்தாள். நறுமணம் வீசும் இம் மலரின் மகிமையே மகிமை என்றாள்.

செருந்துணையான் என்பவன் இதைப் பார்த்தான். விரைந்து ஓடினான் கத்திஎடுத்தான் அம்மையார் கூந்தலைப் பிடித்தான்; ஈர்த்தான், கீழே தள்ளினான். தள்ளி அம்மையார் மூக்கை அறுத்தான் இரத்தம் குபு குபுவெனக் கொட்டிற்று. இந்த அக்கிரமத்தைக் கேட்பார் யாரும் இல்லையா? இங்கு எவருமே இல்லையா யானொரு அரசியாயிற்றே! எனக்கா இந்த அவல நிலை! ஏ! தெய்வமே! தியாகேசப்பெருமானே! உன் அடியாளுக்கா இந்த அலங்கோலம்! அக்கிரமக்காரர்களிடையே நீயும் வாழ்கின்றாய். சைவம் தழைக்க என்ன பாடுபட்டேன். உன் பெருமையை நாள் தோறும் சொல்லிவந்த எனக்கா இந்த மூக்கறுப்பு நிகழ்ச்சி!

இதையும் பார்த்த வண்ணமாகவா இக் கோயிலில் குடிகொண்டுள்ளாய்? ஆண்டவனின் அருளா இது? உன் கோயிலில் உள்ள ஒரு மலரை எடுத்து நுகருவதற்குக் கூடவா அருகதையற்றுப் போனேன்!

பல ஆயிரம் திருப்பதிகளுக்குச் சென்று உன்னையே வழிபட்டு வந்தேனே! இக் கொடியவனை இன்னும் உலகில்விட்டு வைத்துள்ளாயே ஆபத்தில்உதவும் அருளரசன் என்று உன்னை நினைத்திருந்தேனே! உன்னைவிட அநியாயக்காரன் யாராக இருக்கமுடியும்?

உன்னை குறைகூறி என்னபயன் இப்படிப்பட்டக் கொடியவர்களை உலகம் விட்டு வைத்துள்ளதே அதைக்கூற வேண்டும். மதத்தின்பெயரால் மக்கள் மூட நம்பிக்கைக்கு இந்தக் கொடியவர்கள் தலைவர்களாகின்றனரே இவர்களை ஒழிக்க வேண்டும். யான் பெண்! என் கணவர் இங்கில்லை. அவர் வரட்டும். பல்லவ மன்னவராயிற்றே! இந்தக் கொடியவனை உடனே கழுவேற்றி மற்ற கொடியவர்கட்குப் பாடம் கற்பிப்பார் என எண்ணியவாறு இருக்கின்றாள்.

அம்மையார் கணவனாகிய பல்லவமன்னன் கழற் சிங்கன் அங்கே வந்தான். இச் செயலை அஞ்சாது செய்த அக்கொடியவன் யார் எனக் கேட்டான்.

உடனே செருந்துணையான் நான்என்றான்! நீயா? இக்கொடுமைதனைச் செய்தாய் என்றான் கழற்சிங்கன்.

ஆம்! கழற்சிங்கரே! உன் மனைவி இம்மலர் மண்டபத்தின் பக்கத்தில் விழுந்திருந்த ஒருபுது மலரை எடுத்தாள் என்று கூறினான்!

மலரொன்றை எடுத்ததற்காக நீ மூக்கறுத்தாயா? மடையனே! அந்த மலர் தெய்வ

தொடர் 11-ஆம் பக்கம்

கால்டுவெல் காட்டும் வழிகள்

கயல்விழி

பார்ப்பனர்கள் வடமொழியைக் கடவுள் மொழி (தேவபாஷை) என்றும், புனித மொழி, தெய்வீக மொழி என்றும் பொது மக்களிடையே பரப்பி, அதைப் பார்ப்பனர்கள் தாம் கற்கவேண்டுமென விதியும் வரம்பும் அமைத்து வைத்திருந்தனர். அவர்கட்கே உரிய அடுத்துக் கெடுக்கும் வழக்கப்படி அங்கங்கு உள்ள சிற்றரசர்களையும் பேரரசர்களையும் அண்மி வடமொழிக்கு அவர்கள் மூலமாக உயர்வும் புகழும் தேடி, அந்தந்த வட்டார மொழிகளை அம்மொழி பேசும் மக்கள் அறியா வண்ணம் நசுக்கி வந்ததுடன் தங்கள் மொழியில் உள்ள சொற்களை அந்த வட்டார மொழிகளுடன் கலந்து பேசி, எழுதி வந்தனர். அரசனும் இன்ன பிற பெரியவர்களும் அதை விரும்பிப் போற்றியதால் மக்களும் அதைப் பேணிப் போற்றுவது தவிர்க்க முடியாததாகவும், வெறுக்க முடியாததாகவும் இருந்தது.

இந்த நிலை சிறிது மாறி மக்கள் மொழியைப்பற்றியும் நிலையைப் பற்றியும் எண்ணி எழுந்த பின்னர் பார்ப்பனர்கள் அந்தந்த வட்டார மொழியில் உள்ள பல சொற்களையும் தங்கள் சொற்களே என வாதாடி வந்தனர்.

பொதுவாகவே வடமொழி மீது நல்ல நம்பிக்கையும் பெரு மதிப்பும் கொண்டிருந்த நம் மக்கள் அந்தந்த வட்டார மொழிச் சொற்கள் சிலவற்றையும் வடமொழிச் சொற்கள் என்று கூறிய பொழுது தலையை ஆட்டி ஆமாம் என்றனர் – அம்மொழிச் சொற்கள் கலந்திருப்பதால் தம் மொழிக்குச் சிறப்பு என எண்ணி!

தமிழ் மொழியைப் பொறுத்த வரையில் தமிழ் மொழியானது வடமொழிச் சொற்களைக் கடன் வாங்கியிருக்கிறதேயொழிய வடமொழி தமிழ்மொழியினிடமிருந்து கடன் வாங்கவில்லை என்றும் ஆகவே வடமொழி உயர்ந்தமொழி என்றும் தமிழ்மொழி மிகத் தாழ்ந்த மொழி என்றும் பார்ப்பனர்கள் கூறிவந்தனர். இதுபற்றிப் பேராசிரியர், டாக்டர் மு. வ. வின் கீழ்வரும் பொருளுரையை எண்ணுக.

“வட மொழியிலிருந்தே தமிழ் கடன் வாங்கியது என்றும், தமிழினிடமிருந்து வட மொழி ஒன்றும் கடன் வாங்கியதில்லை என்றும், அதனால் தமிழைவிட வடமொழி உயர்வுடையது என்றும் உண்மைக்கு மாறான கூற்றுக்களை வடமொழி கற்றவர் தொடர்ந்துகூறி வந்த காரணத்தால் வட சொற்கள் தமிழர் நெஞ்சில் அன்பான இடம்பெற முடியாமற் போயிற்று. தமிழையும் வடமொழியையும் ஒப்பிட்டு அவற்றின் உண்மையான வளர்ச்சியையும் சிறப்பியல்பையும் சீர் தூக்கி உரை முடியாத புலவர் சிலர் வடமொழிச் சார்பாக நடுநிலை இல்லாமல் கூறிய கூற்றுக்கள் பகைமைக்கு வித்திட்டன.”

“ஒருசிலர் மொழிகளின் சிறப்பியல்புக்கும் உடைமைக்கும் வேறுபாடு அறியாமல், மொழிகளின் இயல்பும் தனி வளர்ச்சியும் ஆராய்ந்து உணராமல் கூறி வடமொழிக்குப் பெருமை தேடித்தர முயன்ற தவருன முயற்சியே, இன்று தமிழ் கற்றவர் பலரும் வடமொழிக் கலப்பை அடியோடு வெறுக்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. தனித்தமிழ் உண்டோ என எழுப்பிய வினவே பிற்காலத்தில் தனித்தமிழ் இயக்கத்தை வளர்ப்பதற்கும் காரணம் ஆயிற்று, என்றும் உண்மையே உண்மையை வளர்க்கும் நடுநிலைமை அற்ற பொய் பொய்யையே வளர்க்கும்.”

(மொழி வரலாறு - பக்கம் - 105)

எனவே பார்ப்பனர்களின் தமிழ் வெறுப்பு தனித் தமிழ் இயக்கத்திற்கு எருவிட்டு நீர் பாய்ச்சியதுபோல் அமைந்தது. மறைமலையடிகளார்தாம் முதன் முதலில் தூங்கிக்கிடந்த தமிழர்களைத் தட்டி எழுப்பித் தனித்தமிழ் இயக்

கத்திற்கு வித்தூன்றிய பேரறிஞர் ஆவார். அவரது "வேளாளர் நாகரிகம்" என்னும் புத்தகத்திலுள்ள ஒவ்வோர் எழுத்தும், சொல்லும் பார்ப்பனரின் பித்தலாட்டத்தை அம்பலப் படுத்துவனவாக அமைந்துள்ளன.

இப்பொழுதிருக்கின்ற நிலையில் தமிழ் நாட்டில் மொழியியல் வல்லுனரான திரு. தேவநேயப்பாவாணர் அவர்கள் ஒவ்வொரு சொல்லுக்கும் வேர்ச் சொல்லைக் கண்டு அது எம் மொழிச்சொல் என்று கூறும் உரனும் திறனும் பெற்றுள்ளார். இதுபோலவே புதுவைக் கவிஞர் பாரதிதாசன் அவர்களும் "வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?" என்ற தலைப்பில் சொற்களை ஆய்ந்து முடிவு கட்டி வருவது தமிழ் நாட்டினர் யாவரும் அறிந்ததே.

வடசொல்லா தமிழ்ச் சொல்லா என்ற போராட்டம் பெருகி வளர்ந்து நிற்கின்ற இக்காலத்தில் காய்தல் உவத்தல் இன்றி ஒப்பியன் மொழிநூலை வகுத்தருளிய கால்டுவெல் காட்டிய ஆறு முறைகளை நாம் ஈண்டுத் தெரிதல் நலம்.

வடமொழிக்கும் திராவிட மொழிகட்கும் பொதுவாகவழங்கும் சொற்களில் சிலவற்றைப் பின்வரும் முறையில் ஆராய்ந்து திராவிட மொழிச் சொற்கள் என்று கூறலாம் என்பது கால்டுவெல் கருத்து.

1. When the word is an isolated one in sanskrit, without a root and without derivatives, but is sowounded in the Dravidian languages-with collateral, related, or derivative words, (A Comparative Grammar of the Dravidian Languages, (P, 566.)

வேர்ச்சொல்லோ அல்லது அதனிடமிருந்து வளர்ந்தமைந்த சொல்லோ இல்லாமல் வடமொழியில் தனிச்சொல்லாக இருந்து அதற்கு இனமான அல்லது ஒத்த பிறப்புடைய சொற்கள் அல்லது அதிலிருந்து வளர்ந்தமைந்த சொற்கள் திராவிட மொழிகள் பெற்றிருந்தால் அதை திராவிடச் சொல்லெனக் கூறலாம்.

2. When sanskrit possesses other words expressing the same idea, whilst the Dravidian tongues have the one in question alone.

ஒரு சொல்லின் பொருளை உணர்த்த வேறு பல சொற்கள் வடமொழியில் இருக்க திராவிட மொழிகளில் அப் பொருளுக்குரிய அந்த ஒரு சொல் மட்டும் இருந்தால் அது திராவிடச் சொல்லாகும்.

3. When the word is not found in any of the Indo-European tongues allied to Sanskrit, but is found in every dialect however rude.

ஒருசொல் வடமொழியில் மட்டும் காணப்பட்டு, வடமொழிக்கு இனமான ஐரோப்பிய மொழிகளில் காணப்படாமல், திராவிட மொழிகளில் பண்பட்டவை, பண்படாதவை, எவற்றிலும் வழங்குவதாக இருப்பின், அதுவும் திராவிடச்சொல் எனப்படும்.

கீழ்க்கண்ட ஊர்களுக்குக்
குயில் விற்பனையாளர் தேவை

பாபநாசம் நெய்வேலி
பண்ணுருட்டி திண்டிவனம்
வருத்தாசலம் விழுப்புரம்
செங்கல்பட்டு தாம்பரம்

விவரங்கட்கு :—

அமைச்சர்,
'குயிலகம்' புதுச்சேரி.

பார்ப்பான்பால் படியாதீர்!

— த. கந்தசாமி அண்ணாமலைநகர் —

பழந்தமிழகம் பாணர்களையும், பாவலர்களையும் செந்தமிழ்க் காவலர்களையும் போற்றிப்புகழ்ந்து, அவர்களுக்குப் பொன்னும் பொருளும் போதுமான அளவுகொடுத்து பண்பாட்டில்சிறந்து, பசுந்தமிழின் சிறப்பைப் பாரெங்கும் பறை சாற்றித் தரணியிலே தனக்கென ஒரு தலையான இடத்தை அடைந்திருந்தது

தெள்ளுதமிழ்ப் புலவராம் திருவள்ளுவரின் செந்தமிழ்க் குறள்களில் திளைத்திருந்தது. தீந்தமிழ்க் காவலர்களைக் கொண்ட தமிழகம், பைந்தமிழ் மன்னர்கள் ஒரு குடைக்கீழ் ஒருமொழி வைத்து, கங்கையையும், கடாரத்தையும் வென்று, கலிங்கத்துப் பரணிகண்டு, கன்னித்தமிழ் மணத்தை எங்கும் பரப்பினார்கள்.

பத்துப்பாட்டின் பழமையினையும், ஏட்டிலே எழுதமுடியாத எண்ணிறைந்த சிறப்புக்களையுடைய எட்டுத்தொகை நூற்களையும் எடுத்தியம்பி ஏற்றம் பெற்றார்கள். பைந்தமிழ் மக்கள் பாடுபட்டுப் பலனடைந்து பாடி ஆடி மகிழ்ந்திருந்தார்கள். இன்பத் தமிழகத்தில் இயல், இசை, நாடகமும், எண்ணிறைந்த கலைகளும் ஏற்றம்பெற்று விளங்கின, தமிழகத்தின் தனிச்சிறப்பையும், தலைமையையும் கண்டு தரணி தலைவணங்கிற்று. பீடுநடைப்போட்டு ஏற்றங்கொண்டிருந்தது எழிலகமாம் தமிழகம்.

அந்த நாளிலே ஆசியாவிலிருந்து ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டு அண்டிப்பிழைக்கவந்தது ஆரியக் கூட்டம். அடிநாளில் அந்த அநாகரிகக் கூட்டம் ஆற்றங்கரையில் ஆடுமாடுகளை மேய்த்துக்கொண்டிருந்தது. நாளடைவில் நயவஞ்சக நரிகளாய் நாடாளும் மன்னர்களை நத்தி, ஆரிய அணங்குகளை அடகுவைத்து அரியணைகளைக் கைப்பற்றிக் கொண்டது. அரசர்களை ஆண்டவனைத் தேடி அலையும்படி செய்துவிட்டு, அதிகாரங்களைக் கைப்பற்றிக் கொண்டது. ஆண்டுகள் பல கழிய ஆதாரமற்ற ஆயிரமாயிரம் அருவருக்கத்தக்க ஆரியக் கடவுள்களை அருந்தமிழ் மக்களிடம் புகுத்தி, அவர்களை அறிவிழக்கச்செய்தது, அநேக அறிவியக்க நூற்களை அழித்து, ஆயிரக்கணக்கான அநாகரிக நூற்களை ஆக்கியது. ஒருகுலமாக வாழ்ந்த உயர்குடிமக்களைப் பிரித்து உயர்வு தாழ்வு கற்பித்து, சாதிப் பாகுபாடுகளை உண்டாக்கியது. ஒரு சில ஆண்டுகளில் உயர்குடிமக்கள் உழைக்க ஆடாமல் அசையாமல் ஆரியம் உண்டுகொழுத்து உடலைவளர்த்தது. ஆயிரமாயிரம்

---

4. When the derivation which the sanskrit Lexicographers have attributed to the words is *evidently a fanciful one,* whilst Dravidna lexicographers deduce it from some native Dravidian verbal theme of the same or a similar signification, from which a variety of words are found to be derived.

ஒரு சொல்லின் பிறப்பைப் பற்றி வடமொழிவல்லார் (நிகண்டு நூலார்) கூறும் வரலாறு.

ந்தையானதாகவும் நம்பத்தகாததாகவும் இருக்க தமிழ் நூலார் கூறும் பிறப்பு வரலாறும் வேர்ச்சொல் தொடர்பும் பொருந்துவனவாக இருப்பின் அதுவும் திராவிடச் சொல்லே.

5. When the signification of the word in the Dravidian languages is evidently radical and physiological, whilst the sanskrit signification is metaphorical, or only collateral.

ஒரு சொல்லின் பொருள் திராவிட மொழிகளில் நேரிதாகவும், தெளிவாகவும். வேர்ச்சொல்லுடன் தொடர்புடைய தாகவும் இருக்க வடமொழியில் உள்ள பொருள் உருவகப் பொருளாகவும் நேர்த் தொடர்பு அற்றதாகவும் இருப்பின் அதுவும் திராவிடச் சொல் எனக் கொள்ளத்தகும்.

6. When native Tamil and Telugu scholars, not with standing their high estimation of sanskrit, classity the word in question as a purely Dravidian one:

வடமொழியிடத்துப் பெருமதிப்பு உடையவர்களாகிய தமிழ், தெலுங்கு மொழிப் புலவர்களே ஒரு சொல்லைத் திராவிடச் சொல் எனக் குறிப்பராயின் அது உண்மை எனப் போற்றத்தக்கதாகும்.

<★>

அறிவுச் சுடர்களை ஆட்டிப்படைத்து அழித்து மகிழ்ந்தது.

பகுத்தறிவுப் பகலவன் புத்தரையும் அடிநாளிலிருந்து ஆரியர்களுக்காக அரும்பாடுபட்ட காந்தியாரையம், அறிவுலக மேதை அண்ணல் அம்பேத்காரையும் அழித்து அளவிலா ஆனந்தமடைந்தது. பல்லாயிரக் கணக்கான பைந்தமிழ் மக்களிடையே ஆரியமாயையை எடுத்தியம்பிவந்த அறிஞர்களையும் அனுமார்களாக்கியது. தமிழ் வீரர்களை விபீடணர்களாக்கியது. பாரிலுள்ளோருக்கு பொன்னும் பொருளும் அள்ளி அள்ளிக்கொடுத்த பச்சைத் தமிழர்களைப் பந்துவிடமும் பண்டிதரிடமும் பணத்திற்காகப் பல்லிளித்து நிற்கச்செய்திருக்கிறது. பகுத்தறிவில்சிறந்து பாரில் யாருக்கும் பணியாத பழந்தமிழர்களை! 'பாரத மாதாகி ஜே' என்று பிதற்ற வைத்திருக்கிறது. இமயத்தில் நாமிருந்த நிலையைமாற்றி இன்பத் தமிழகத்தில் வடவர்கள் இருக்கும் நிலைமையை ஏற்படுத்தியது.

சூழ்ச்சித் திறம்மிக்க அந்த ஆரியக்கூட்டம் பொதுவுடைமைப் பூங்காவில் போற்றப்படுகிறது அங்குள்ள சூதறியாத் தொழிலாளர்களைச் சுரண்டி வாழ்கிறது. அணங்குகளை அடகுவைத்து அறிஞர் குழுவின் அந்தரங்க அமைச்சராகவும், ஆலோசகராகவும் அமர்ந்து அந்தக் குழுவை ஆட்டிப்படைக்கின்றது. ஆனால் பெரியார் பெரும்படை மட்டும் ஆரியத்தை, அகற்றவேண்டிய அநாகரிகப் பேய் என்று கருதி, பாமர மக்களிடமும், பட்டதாரிகளிடமும், பல்கலைக்கழக மாணவர்களிடமும் 'பார்ப்பான் பால் படியாதீர்' என்று பறைசாற்றி வருகிறது ஆனால் அந்த அநாகரிக ஆரியக்கூட்டத்தை அறிவிழந்த அறிஞர் கூட்டங்களும், ஆரிய அடிவருடிகளும், அறிவின் சிகரம் என்றும், 'ஆசியாவின் சோதி' என்றும் புகழ்பாடிக்கொண்டு ஞமலிவாழ்வு வாழ்கின்றன.

நாம் அடிமையானதும் அறிவிழந்ததும், ஆயிரமாயிரம் கடவுள்களைக் கட்டிக்கொண்டு அழுவதும் ஆடுமாடு ஓட்டிக்கொண்டு அண்டிப் பிழைக்கவந்த ஆரியக் கூட்டத்தால்தான் என்பதை அறிவுலகச் சுடர், எதிர்ப்புக்கு அஞ்சாத அரிமா, ஈரோட்டுத் தங்கம், திராவிடத்தின் விடிவெள்ளி பெரியார் ஈ. வெ. ரா. அறிந்து அருந்தமிழ் மக்களிடம் அஞ்சாமல் சான்றுகளுடன் பல்லாண்டாகக் கூறி வருகிறார்.

அண்மையில் ஆரியத்தலைவன் 'அவசரக் குடுக்கை' நேரு பண்டிதர் நாட்டிற்குச்சென்று ஆரியம் அணுகுண்டைவிட ஆபத்தானது, அறிஞர்களை அறிவிழக்கச் செய்யக்கூடியது; என்று அஞ்சாமல்கூறித்தாயகம்திரும்பிவந்தார். அண்ணல் பெரியார். ஆரியக்கூட்டத்தின் அடாத செயல்களைப் பலவாண்டாக அறிந்த செந்தமிழ்ப் பகுத்தறிவுப் பாவேந்தர் பாரதிதாசனார்,

"பார்ப்பான் பால்படியாதீர்;
சொற்குக்கீழ்ப் படியாதீர்
உம்மை ஏய்க்கப்

பார்ப்பான்;தி துறப்பார்ப்பான்
கெடுத்துவிடப் பார்ப்பான்எப்
போதும் பார்ப்பான்

ஆர்ப்பான்நம் நன்மையிலே
ஆர்வமிக உள்ளவன்போல்!
நம்ப வேண்டாம்

பார்ப்பானின் கையைஎதிர்
பார்ப்பானையே பார்ப்பான்
தின்னப் பார்ப்பான்.

தமிழின்பேர் சொல்லிமிகு
தமிழரிடைத் தமிழ்நாட்டில்
வாழ்ந் திட்டாலும்

தமிழழித்துத் தமிழர்தமைத்
தலைதூக்கா தழித்துவிட
நினைப்பான் பார்ப்பான்.

அமுதாகப் பேசிடுவான்
அத்தனையும் நஞ்சென்க
நம்ப வேண்டாம்

தமிழர்கடன் பார்ப்பானைத்
தரைமட்டம் ஆக்குவதே
என்றுணர்வீர்" என்று,

பகர்வதை நினைவுகூர்ந்து பார்ப்பான்பால் படியாமல் பெரியாரைப் பின்பற்றி இன்பத்தமிழகம் இனிதடைய எல்லோரும் பாடுபடுவோமானால் 'ஆகாசவாணி'க்காக அருமைத் தமிழன்பர் அரங்கரெத்தினம் உண்ணாநோன்பு இருக்க வேண்டியிருக்காது. எவ்வகைத்தடையும் இல்லாமல் தமிழன்னை அரியணை ஏறுவாள். செந்தமிழ் நாட்டு மக்கள் எல்லோரும் செழிப்புற்றுச் சீரும் சிறப்பும் பெற்றுத் தன்மானத்துடன் தலைநிமிர்ந்து தனியாட்சிப்பெற்ற மக்களாக உலகம் போற்ற வாழலாம்:

விரைந்திடு களத்தை நோக்கி!

முத்து. முருகன், திட்டக்குடி.

சூழ்ந்திடும் பகையை எண்ணித்
துடித்துளம் கொதித்து முன்னர்
வாழ்ந்திட்ட நிலையைச் சொல்லி
வடிக்கின்ருள் தாய்தன் கண்ணீர்!
வீழ்ந்திட்ட நாட்டை நீக்கி,
வீணராம் வடவர் பாதம்
'ஏம்பிறப் படியேம்! என்றே
இருக்கின்ருய்! தமிழா வெட்கம்!

எழுந்திரு! தமிழா இன்றே
எங்கணும் புரட்சிப் பண்கள்
முழங்கிடு! அன்னை நாட்டை
மீட்டிட முயல்வாய்! மேன்மேல்
செழித்திடுக் தமிழின் வாழ்வைச்
சிதைத்திடும் இந்திப் பேயின்
கழுத்தினை அறுப்பாய்! அந்தக்
களத்தினில் தமிழைக் காப்பாய்!

வேல்தூக்கிப் படையைக் கூட்டி
விரைந்திடு களத்தை நோக்கிக்
கால்நக்கி வாழும் வாழ்க்கைக்
கணமேனும் நமக்கு வேண்டாம்!
கோலினைக் கண்டே ஆடும்
குரங்குநேர் வாழ்வை நீக்கி
மேலெனச் சொல்வாய் நாட்சை
மீட்டிட எழுவோன் மாண்பை!

வீரத்தால் நடப்பாய் அந்த
வெண்தாடி வேந்தர் பாதை
சேரநீ விரைதல் வேண்டும்!
செந்தமிழ் நாட்டின் வாழ்வைப்
போராடிப் பெறுவேன் என்று
புறப்படு! நின்னைச் சார்ந்த
வீரர்கள் படைஅ தோபார்
விரைந்திடு களத்தை நோக்கி!

★

வெளிவராச் செய்தி

வெளியிட முடியாவிட்டால் திருப்பி அனுப்புக என்று கூறுகின்றவர்கள் திருப்பி அனுப்புவதற்குரிய அஞ்சல் தலை அனுப்பவேண்டும்.

— ஆசிரியர்

நல்லவர்களா...?

மலராகத்தான் இருக்கட்டுமே! அந்த தெய்வத்தையே எந்நேரமும் மனதில் வைத்துள்ள இவனுக்கா அந்த மலரைத் தொடக்கூட உரிமையில்லை! கருத்தற்றவனே! உன்னைக் கழுவேற்றி என்ன கொடுமைப் படுத்துகிறேன் பார்! உன் கொட்டத்தை அடக்காவிடில் நான் பல்லவ நாட்டு மன்னவனல்ல! என் மனைவியைத் தொட்டதே பெருங்குற்றம்! அதைவிட அவள் மூக்குதனை அறுத்தாயே அதைவிடப் பெரிய குற்றம்! சைவ சமயத்தை சார்ந்தவனே! அன்பே சிவம் என்பதை உணர்ந்தவனே! நீ அறுக்கும் தொழிலா கொண்டிருப்பது? கொலைகாரனே! கொடியவனே! உன்னை என்ன பண்ணுகிறேன் பார்—என வஞ்சினம் கொள்ளவில்லை! மாருக,

நண்பா! நீ மூக்கையா அறுத்தாய்! அஹா! அற்புதமான காரியம். இருந்தாலும் நண்பரே! என்மனைவி அம்மலரை தன்கையால் அல்லவோ எடுத்தாள். நீ தவறு செய்துவிட்டாய்! முதலில் அவள் கையை அல்லவா துண்டிக்கவேண்டும் என்றுகூறி அவனது உடைவாளால் மனைவியின் கையைத் துண்டித்தான். அவ்வரிய செயலைக் கண்டனராம் தேவர்கள்! உடனே வானத்தினின்று மலர்மாரி பொழிந்தனராம்!

என்ன விந்தை! சாதாரண மனிதன்கூட இச்செயலை செய்யமாட்டான். தன் மனைவியை இன்னொருவன் தொட்டு மூக்கறுத்ததைக் கேட்டுக் கொதித்தெழாமல் தானும் அவள் கைதனை வெட்டுவதென்ருல் அவர்களை நல்லவர்களென்றும் நாயன்மார்களென்றும் எவ்வாறு சொல்லமுடியும்?

அத்தகைய செயலுக்கு தேவர்கள் மலர்மாரி பொழிந்தனர் என்ருல் அத் தேவர்களை என்னென்று சொல்லுவது?

அன்பே சிவம் என்று கூறுபவரின் செயலாஇது? இவர்களுக்குக் கழற்சிங்கநாயனர் என்றும் செருந்துணைநாயனர் என்றும் பட்டம் கொடுத்தவர் யாரோ?

அறுபத்து மூவரில் இருவரின் செயல் இதுவென்ருல் மீதி அறுபத்தொருவரின் செயல் மட்டும் என்னவாம். இதுதானே!

ஐயோ! கொடுமையிலும்! கொடுமை!!
மடமையிலும் மடமை!

குயில்

Regd. No. M. 7030.

பேசு

கணகண வென்று மணியடித்தது
காது கேட்கலையா ?-பாப்பா
காது கேட்கலையா ? தம்பி
காது கேட்கலையா ?- உன்
கையிற்சுவடிப் பையை எடுக்க
நேரம் வாய்க்கலையா ?

முணுமுணு வென்று மூலையிலே
நின்றால் என்னவரும் ? – பாப்பா
நின்றால் என்னவரும் ? - தம்பி
நின்றால் என்னவரும் ? - என்
முன்னேவந்து சொன்னால் வாயின்
முத்தா சிந்திவிடும் ?

பலகை இல்லையா எழுதப்
பலபம் இல்லையா ? -பாப்பா
பலபம் இல்லையா ? -தம்பி
பலபம் இல்லையா ? - வீட்டுப்
பாடம்எழுத மறந்த துண்டா,
அந்தத் தொல்லையா ?

சலவை செய்து வந்தசட்டை
வேண்டும் என்றாயா ? -அழுக்கு
வேண்டாம் என்றாயா ? - தம்பி
வேண்டாம் என்றாயா ? - இதோ
சலவைச்சட்டை போட்டுக் கொண்டாய்
சிரித்துக் கொண்டாயா ?

மனதில் உள்ளதை எடுத்துச்சொல்ல
வாயும் இல்லையா ? - பாப்பா
வாயும் இல்லையா ? - தம்பி
வாயும் இல்லையா ? - நீ
வாய்திறந்தால் கொடுக்கத் தந்தை
தாயும் இல்லையா ?

தனித்தமிழில் கலகல என்று
தட்டாமல் பேசு - பாப்பா
தட்டாமல் பேசு - தம்பி
தட்டாமல் பேசு - நீ
சாலையோரம் நடக்க வேண்டும்
எங்கே கை வீசு !

★○★

ஆசிரியர், வெளியிடுவோர், பொறுப்பாளர்: பாரதிதாசன், புதுச்சேரி.
அச்சிடுவோர்: மா. தண்டபாணி, பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.